தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*******

ஆணை எண் 163/ந/2023
நாள் 07.08.2023

திரு. A. வெங்கடேசன்,
ஊத்தங்கரை,
கிருஷ்ணகிரி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
திருப்பத்தூர் நகராட்சி,
திருப்பத்தூர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை, மாரம்பட்டி கிராமம், எண்.52 என்ற முகவரியில் வசிக்கும் திரு. A. வெங்கடேசன் என்பவரின் 02.05.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 08.05.2023 அன்று பெறப்பட்டு 163/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனு மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை, மாரம்பட்டி கிராமம், எண்.52 என்ற முகவரியில் வசிக்கும் திரு. A. வெங்கடேசன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

“திருப்பத்தூர் நகராட்சிக்கு சொந்தமான அண்ணாமலை வணிக வளாகம் கடை எண்.1 திருப்பத்தூர் சர்வோதய சங்க கதர் நிறுவனம் ஆகும். இதன் விற்பனை கிளை குத்தகைக்கு எடுக்கப்பட்ட சுமார் 30 ஆண்டு காலமாக கதர்பவன் விற்பனை கிளையாக செயல்பட்டு வந்தது. 2016–ல் நிர்வாகத்திற்கு புதியதாக பொறுப்பேற்ற மேற்படி சங்க நிர்வாகஸ்தர்கள், அந்த கடை தொடர் நட்டத்தில் இயங்குகிறது எனவும், வாடகை அதிகம் எனவும் கூறி அந்த கடையை வேறு இடத்திற்கு மாற்றிவிடலாம் என 28.08.2017–ல் தீர்மானம் நிறைவேற்றி கடை வேறு இடமான சுபாஷ் காம்பளக்ஸ், புதிய அவுசிங் போர்டு, தருமபுரி சாலை, திருப்பத்தூர் கட்டடத்திற்கு மாற்றிவிட்டார்கள். நகராட்சி அலுவலகத்தில் கட்டடத்தை ஒப்படைக்காமல் தனிநபர் ஒருவருக்கு ரூபாய் 16,00,000/– (ரூபாய் பதினாறு இலட்சம் மட்டும்) பணம் பெற்றுக் கொண்டு, சங்கவிதி மற்றும் சட்டத்திற்கு எதிராக உள்குத்தகைக்கு விற்பனை

செய்து உள்ளார்கள். மேலும் நிறுவனத்தின் வங்கி கணக்கை தவறாகப் பயன்படுத்தி பணபரிவர்த்தனை செய்துள்ளார்கள் அதில் ரூபாய் 14,00,000/– மட்டும் நகராட்சி கடை வாடகை கணக்கில் முறைகேடாக வரவு வைத்துள்ளார்கள்.

கடந்த 5 ஆண்டுகளாக நகராட்சி கட்டடத்தில், நிறுவனத்தின் விற்பனை கிளை இல்லை. ஆனால் நகராட்சிக்கு மாத வாடகை மட்டும் செலுத்தியுள்ளார்கள். நகராட்சி நிர்வாகமும் தெரிந்தே கடை வாடகை வசூல் செய்துள்ளார்கள். அதில் கதர் நிறுவனத்திற்கு சுமார் ரூ.12/– இலட்சம் அளவிற்கு வாடகை மோசடி நடைபெற்று இருப்பது தெரிய வருகிறது.

இந்த முறைகேடு சம்பந்தமாக பாதிக்கப்பட்ட ஊழியர்கள் மற்றும் சங்க சப்ளையர்கள் கடந்த 4 ஆண்டுகளாக பலமுறை மனு மற்றும் புகார் அளித்தும், உரிய ஆதாரம் கொடுத்தும் திருப்பத்தூர் நகராட்சி ஆணையாளர் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து வருகிறார். மேல்முறையீட்டு மனுவின் பேரில் வேலூர் மண்டல இயக்குநருக்கும் விசாரணைக்காக அனுப்பப்பட்டது. அவரும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை" என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 07.06.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் திருப்பத்தூர் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

திருப்பத்தூர் நகராட்சி ஆணையாளர் தனது 26.07.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

திருப்பத்தூர் நகராட்சிக்குச் சொந்தமான புதிய வணிக வளாகம் கடை எண்.1–ன் குத்தகை உரிமதாரர், சர்வோதய சங்க மேலாளர், திருப்பத்தூர் என்ற நிறுவனம் ஆகும். மேற்படி கடைக்கு மேலாளர், சர்வோதய சங்கம், திருப்பத்தூர் சார்பில் சுமார் 30 வருடங்களாக மாத வாடகை நகராட்சிக்குச் செலுத்தப்பட்டு வருகிறது.

தற்போது திரு.ஏ.வெங்கடேசன், ஊத்தங்கரை, என்பவர் 30.05.2022–ம் தேதிய மனுவில் திருப்பத்தூர் சர்வோதய சங்கம் என்ற நிறுவனம் மத்திய, மாநில அரசுகளின் நிதி உதவி பெற்று இயங்கி வரும் காந்திய கதர் நிறுவனம் என்றும் மேற்படி நிறுவன நிர்வாகிகள் மேற்படி கடையை குத்தகை விதிகளுக்கு மாறாக தனி நபரிடம் ரூ.16,00,000/– பெற்றுக் கொண்டு சட்ட விரோதமாக உள் குத்தகைக்கு விட்டுள்ளதாகவும், இது குறித்து உரிய விசாரணை செய்து உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு கடையை நகராட்சி நிர்வாகத்திடம் ஒப்படைக்க ஆவன செய்யுமாறு மனு அளித்து இருந்தார்.

திருப்பத்தூர் நகராட்சி அலுவலக கடிதம் ந.க.எண்.0152/2020/அ4 நாள் 16.12.2022–ல் மேற்படி கடை உள் குத்தகைக்கு விடப்பட்டதா என விவரம் கோரி மேலாளர், சர்வோதய சங்கம், திருப்பத்தூர் அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டது. தவறும்பட்சத்தில் மேற்படி நிறுவனத்தின் குத்தகை உரிமம் ரத்து செய்யப்பட்டு மறு ஏலம் விடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. திருப்பத்தூர் நகராட்சி வருவாய் ஆய்வரும் மேற்படி அலுவலகத்தை பலமுறை நேரில் அணுகி விவரம் கோரியும் மேற்படி நிறுவனம் எவ்வித விளக்கமும் இந்நாள்வரை அளிக்கவில்லை.

திருப்பத்தூர் நகராட்சி, மேற்படி நிறுவனத்தின் விளக்கம் ஏதும் இல்லை என்று கருதி மேற்படி புதிய வணிக வளாகம் கடை எண்.1–ஐ உடனடியாக பூட்டி சீல் வைத்து நகரமன்ற

அனுமதியுடன் மேற்படி குத்தகை உரிமையை ரத்து செய்து ஏன் மறு ஏலம் விடக்கூடாது என்பதற்கான விளக்கத்தினை ஒரு வார காலத்திற்குள் அளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

நகராட்சி கடைகள் குத்தகை நிபந்தனைகளின்படி நகராட்சி கடையை குத்தகை உரிமதாரர் உள் குத்தகைக்கு விடக்கூடாது. எனவே, இப்பொருள் குறித்து மனுதாரர் அளிக்கும் பதில் அடிப்படையில் அல்லது விசாரணை செய்து உரிய மேல் நடவடிக்கை உடனே எடுக்கப்படும்'' என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் திருப்பத்தூர் நகராட்சி ஆணையரும் 27.07.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 24.07.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு. A. வெங்கடேசன் 27.07.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது எழுத்து பூர்வமான வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

''தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ கடித எண்.163/ந/2023–5 நாள்.24.07.2023–ன்படி இன்று 27.07.2023 மதியம் விசாரணைக்கு மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்கள் முன் ஆஜரானேன். விசாரணையில் என் தரப்பு ஆவணங்களை நேரில் காண்பித்து குற்றம் நடைபெற்றது மற்றும் நடவடிக்கை எடுக்க வேண்டிய நகராட்சி அலுவலர், நடவடிக்கை எடுக்காமல் இருந்தது, திருப்பத்தூர் சர்வோதய சங்கம் வசம் இருந்த நகராட்சி கடை எண்.1–ஐ சங்க நிர்வாகஸ்தர் செயலாளர் திரு.C.லோகேஸ்வரன் என்பவர் உள்ளாட்சி நிர்வாகம் குத்தகை விதிக்கு எதிராக செயல்பட்டு தனிநபரிடம் சுமார் ரூ.16,00,000/– பெற்றுக் கொண்டு அதில் ரூ 14,00,000/– நகராட்சி நிர்வாகம் வாடகை கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது, அவை பின்பு கடை இலாப கணக்கில் மாற்றப்பட்டு சட்டவிரோதமாக பண பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கிறேன். சங்க தீர்மானம் எண்.519 நாள் 28.08.2017–ன்படி நகராட்சி கடை எண்.1–ஐ காலி செய்து வேறு இடத்திற்கு மாற்றப்பட்டது. கடை கட்டடம் சங்க வசம் இல்லை என்பதற்கு இவையே ஆதாரம். தற்போது கடை எண்.1–ல் சங்க நிறுவனத்திற்கு சம்பந்தம் இல்லாத 10 ரூ, 20 ரூ பிளாஸ்டிக் பொருட்கள் தனி நபர் ஒருவரால் விற்பனை செய்யப்படுகிறது. இந்நிலையில் சங்கச் செயலாளர் 17.12.2020 நாளிட்ட கடிதத்தில் நகராட்சி கடை எண். 1, சங்க வசம் தான் உள்ளது எனவும் அதற்கு மாதா மாதம் வாடகை செலுத்தி உள்ளதாகவும் பொய்யான கடிதத்தை நகராட்சி நிர்வாகத்திடம் வழங்கி உள்ளார். ஏற்கனவே ரூ 16,00,000/– மோசடி நடந்ததை மறைத்து சங்கத்திற்கு நட்டம் ஏற்படும் வகையில் வாடகை செலுத்தியதாக தெரிய வருகிறது. இல்லாத கடைக்கு வாடகை பெற்ற நகராட்சி நிர்வாகம் இதற்கு பொறுப்பேற்க வேண்டும். அதன் பேரில் உரிய நடவடிக்கை இல்லாத பட்சத்தில், தங்களிடம் முறையிட்டு இன்று விசாரணைக்கு ஆஜராகி உள்ளேன்.

திருப்பத்தூர் நகராட்சி ஆணையாளர் அவர்கள் கடந்த ஐந்து ஆண்டுகளாக கடையானது உள் குத்தகைக்கு விடப்பட்டு விதிக்கு எதிராக செயல்படுவது தெரிந்தும், அரசு கட்டடத்திற்கு தனிநபர் மூலம், விதிக்கு எதிராக சுமார் ரூ 16,00,000/– மோசடியாக பெற்று இருப்பதும், சங்க நிர்வாகம் இல்லாத கடைக்கு வாடகை வசூல் செய்து இருப்பதும் இவை ஊழல் மற்றும் குற்ற நடவடிக்கையை ஊக்குவிக்கும் செயலாக நகராட்சி ஆணையாளரின் செயல்கள் இருந்து வருகிறது. குற்றம் நடக்காமல் இருக்க வேண்டிய பொறுப்பு ஆணையாளருக்கு இருந்தும், அதை தடுத்து நிறுத்தாததால் அந்த குற்றத்திற்கு இந்திய தண்டனைச் சட்டம் 1860 பிரிவு 120–ன் கீழ் உடந்தையாக இருந்ததாகவே கருதப்படும். ஆணையாளர், அவர்களிடம் இருந்து சுமார் 6 ஆண்டு காலம் சங்க நிர்வாகத்தின் பெயரில் வாடகை வசூல்

செய்தது முற்றிலும் தவறான செயலாகும். மேற்படி தொகையை அவரிடம் இருந்து வசூல் செய்து சங்கக் கணக்கில் வரவு வைக்க வேண்டியும், பொய்யான கடிதம் அளித்த சங்க நிர்வாகஸ்தர்கள் மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவு 192 மற்றும் 193–ன்படி நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். இந்த முறைகேடு சம்பந்தமாக சங்க சப்ளையர்ஸ் திரு.K.முருகேசன் என்பவர் தனது 20.10.2020 நாளிட்ட மனுவில் மாண்புமிகு முதலமைச்சரின் தனிப்பிரிவு, நகராட்சி நிர்வாக ஆணையாளர், திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர், திருப்பத்தூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர், திருப்பத்தூர் நகராட்சி ஆணையாளர், ஆகியோர்களுக்கு மேற்படி முறைகேடு சம்பந்தமாக உள் குத்தகை விட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி மனு அளித்துள்ளார். மேற்படி மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய நகராட்சி நிர்வாகம், உரிய நடவடிக்கை எடுக்காமல் 26.06.2020 அன்று விசாரணைக்கு ஆய்வாளர் மூலம் உட்படுத்தியதாகவும், மேற்படி முழு தகவல்களை வழங்காமல் மறைத்து இருப்பதும் தெரிய வருகிறது. மேற்படி எந்த நடவடிக்கையும் எடுக்காததால் உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி நான் 30.05.2022–ல் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு புகார் அளித்தேன்.

எனவே, சங்க நிர்வாகஸ்தர்கள் மீது நகராட்சி கடைகள் உள் குத்தகை விதியின்படி நடவடிக்கை எடுக்கவும், பொய்யான கடிதம் சமர்ப்பித்தவர்கள் மீது இந்திய தண்டனை சட்டம் 192, 193–ன்படி வழக்கு பதியவும் அவர்கள் சட்ட விரோதமாக பணபரிமாற்றம் செய்த ரூ.16,00,000/– ஐ அவர்களிடம் பெற்று அரசு கருவூலத்தில் செலுத்துமாறு நடவடிக்கை எடுக்க நகராட்சி நிர்வாகத்திற்கு தாங்கள் உரிய ஆணை பிறப்பித்து உதவுமாறு பணிவுடன் பிரார்த்திக்கிறேன்.

மேலும் குற்ற செயல்களுக்கு உடந்தையாக இருந்து கடமையை செய்ய தவறிய நகராட்சி நிர்வாகத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான திருப்பத்தூர் நகராட்சி ஆணையாளர் 27.07.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

''கிருஷ்ணகிரி மாவட்டம் திருப்பத்தூர் நகராட்சியில், நகராட்சிக்கு சொந்தமான அண்ணாமலை வணிக வளாகக் கடைகளில், கடை எண் 1ல் திருப்பத்தூர் சர்வோதய சங்கத்தின் கதர் நிறுவனம் இயங்கி வருகிறது. மேற்கண்ட சர்வோதய சங்கம் உள் வாடகைக்கு விடப்பட்டுள்ளதா என்பது குறித்தும் அதற்கான ஆவணங்களையும் மனுதாரர் நகராட்சிக்கு அனுப்பியுள்ள புகார் மனுவுடன் சமர்ப்பிக்கவில்லை. மேலும் மேற்கண்ட சர்வோதய சங்கத்தின் மேலாளருக்கு 16.12.2022 நாளிட்ட கடிதம் மூலமும், நகராட்சியினர் நேரில் அணுகியும் அந்நிறுவனம் எவ்வித விளக்கமும் இதுவரை அளிக்கவில்லை. இந்நிலையில், கடை எண் 1ல் இயங்கி வரும் மேற்கண்ட சங்கத்தின் கடை உள் வாடகைக்கு விடப்பட்டிருப்பின் அக்கடையின் குத்தகை உரிமையை ரத்து செய்து ஏன் மறு ஏலம் விடக்கூடாது என்பதற்கான விளக்கத்தினை அளிக்குமாறு நகராட்சியின் 21.7.2023 நாளிட்ட கடிதத்தில் கோரப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் சர்வோதய சங்கம் உள் வாடகைக்கு விடப்பட்டதற்கான ஆவணங்களை மனுதாரர் திரு. வெங்கடேசன் என்பவரிடமிருந்து பெற்று, மேற்கண்ட சங்கம் தனி நபருக்கு ஏதேனும் உள் வாடகைக்கு விடப்பட்டிருப்பின் அதன் மீது 15 நாட்களில் நகராட்சியால் மேல்

நடவடிக்கை எடுக்கப்படும் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், திருப்பத்தூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை, வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு.A.வெங்கடேசன் என்பவர் தனது 02.05.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில், திருப்பத்தூர் நகராட்சிக்கு சொந்தமான அண்ணாமலை வணிக வளாகத்தில் அமைந்துள்ள கடை எண்.1 என்ற கடையினை 30 ஆண்டுகளுக்கு முன்பு சர்வோதய சங்கம் கதர் நிறுவனத்திற்கு திருப்பத்தூர் நகராட்சியால் குத்தகைக்கு விடப்பட்டது எனவும் ஆனால் அந்த சர்வோதய சங்கம் வேறு இடத்திற்கு மாற்றம் செய்யப்பட்ட பின் சங்கத்தாரே கடை எண்.1–ஐ தனிநபரிடம் ரூ.16/– இலட்சம் பெற்றுக் கொண்டு முறைகேடாக உள் வாடகைக்கு விட்டுள்ளதாகவும் புகாராக தெரிவித்து, இல்லாத கடைக்கு நகராட்சி ஆணையாளர் வாடகை பெற்று வருவதால் ஆணையர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

மேற்காணும் புகார் குறித்து மனுதாரர் ஏற்கனவே நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு புகார் மனு சமர்ப்பித்த நிலையில், இயக்குநரின் 12.10.2022 நாளிட்ட கடிதத்துடன் மனுதாரரின் புகார் மனுவும் திருப்பத்தூர் நகராட்சிக்கு வரப்பெற்றதும்; ஆணையாளர் தனது 16.12.2022 நாளிட்ட கடிதம் மூலம் சர்வோதய சங்க மேலாளரிடம், நகராட்சிக்கு சொந்தமான கடை (கடை எண்.1) உள்குத்தகைக்கு விடப்பட்டுள்ளதாக தெரிவிக்கும் புகார் குறித்து விளக்கம் அளிக்குமாறும், தவறும் பட்சத்தில் தங்களின் குத்தகை உரிமம் ரத்து செய்யப்படும் என்று தெரிவித்துள்ளதை ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது.

மேலும் நகராட்சியினர் நேரில் அணுகியும் அந்நிறுவனம் எவ்வித விளக்கமும் இதுவரை அளிக்கவில்லை என்பதையும், நகராட்சியின் 21.07.2023 நாளிட்ட கடிதத்தின் மூலம் மேற்படி சங்கக் கடை உள் குத்தகைக்கு விடப்பட்டிருப்பின் கடையின் குத்தகை உரிமையை ஏன் ரத்து செய்து மறு ஏலம் விடக்கூடாது என்று விளக்கம் கோரியுள்ளதையும் ஆணையாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நிலையில், இம்முறைமன்ற நடுவ விசாரணை நடைபெற்ற போது, மனுதாரர் திரு.வெங்கடேசன் என்பவர் தன்னிடம், சர்வோதய சங்கம் உள்வாடகைக்கு விடப்பட்டதற்கான போதிய ஆவணங்கள் உள்ளதாக தெரிவித்து அதனை பின்னர் நகராட்சி ஆணையாளரிடம் வழங்குவதாக விசாரணையின் போது தெரிவித்த நிலையில், எதிர்மனுதாரரான திருப்பத்தூர் நகராட்சி ஆணையாளர், மேற்படி ஆதார ஆவணங்களை மனுதாரரிடமிருந்து பெற்று தனிநபருக்கு உள் வாடகைக்கு விடப்பட்டிருப்பின் அதன் மீது 15 நாட்களுக்குள் நகராட்சியால் மேல்நடவடிக்கை எடுக்கப்படும் என தனது வாக்குமூலத்தில் உறுதி அளித்துள்ளார்.

ஆணையாளர் தனது வாக்குமூலத்தில் உறுதியளித்துள்ளபடி, மனுதாரரிடம் உரிய ஆவணங்களை பெற்று உரிய விசாரணை மேற்கொண்டு, உரிய சட்டப்பிரிவுகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அதன் அறிக்கையை 1 மாத காலத்திற்குள் அனுப்பி

வைக்குமாறும் திருப்பத்தூர் நகராட்சி ஆணையாளரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 07–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. A. வெங்கடேசன்,
52, மாரம்பட்டி, ஊத்தங்கரை வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம் – 635 207.

2) ஆணையாளர், திருப்பத்தூர் நகராட்சி,
கிருஷ்ணகிரி மாவட்டம் – 635 601.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகர் நிர்வாக அலுவலக வளாகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உரையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

5/8/23
உதவிப் பதிவாளர்

09/08/23